**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**
**C.C.No.378/2021**

**Prosecution Witness : 7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அனிதா | **Caste** | : |
| **Father's Name** | : ராஜாங்கம் | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : மதுரை , சித்தாளை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 45/2026 |
| | | **Dated** | : 19.05.2026 |

**19.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திருமதி . அனிதா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதுரை k.புதூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.02.2021ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண்.883/2020 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(1) இதச வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பொன்னர் என்பவரை விசாரித்த காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு முதல் விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் லிடியா செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(1) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தாக்கல் செய்த விபத்து பதிவேட்டில் சம்பவம் நடந்த நேரம் 5.00 மணி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த நேரம் 05.30 மணி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் அ.சா.1ன் வீட்டின் முன்பாக நடந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மண்ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் இரத்தம் இருந்திருந்ததாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இரத்தம்பட்ட மண், மற்றும் இரத்தம்படாத மண் ஆகியவற்றை கைப்பற்றி ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தின் அ.சா.1ற்கு காயம் ஏற்பட்டிருந்தால் காயத்தின் விளைவாக இரத்தம் அவரது சட்டையில் பட்டிருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு அ.சா.1ன் இரத்தம்பட்ட ஆடையை கைப்பற்றி ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எதிரிகளின் பெரியப்பாவிற்கு சந்தோஷ் என்பவர் எவ்வளவு பணம் வாங்கி கொடுத்தார் என்று எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்படும் இரும்பு கம்பியின் நீளம், அகலம், வடிவம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரிகளிடமிருந்து சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் அதிகமாக இருக்கும் பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் கண்ணுற்ற சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 14ல் அ.சா.1யிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு 23 நாட்கள் காலதாமதமாக அனுப்பியதற்கான காரணத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தைப் பெற்று எதிரிகளுக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும், சம்பவயிடம் சென்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C — Digitally signed by DINESH KUMAR C Date: 2026.05.19 15:34:40 +0530

Judicial Magistrate No.II
Dindigul.